# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 160/43 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/43 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

முதலமைச்சரின் விதப்புரையின்மீது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
நுவரெலியா,
1975 ஏப்பிறல் 19.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, அவசரகால (படைப்பயிற்சியைத் தடைசெய்யும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. படைப்பயிற்சி அல்லது பயிற்சி எப்பொலிசுக் கண்காணிப்பாளரின் பிரதேசத்தில் நடைபெறவுள்ளதோ அப்பொலிசுக் கண்காணிப்பாளரினால் அத்தகைய படைப்பயிற்சி அல்லது பயிற்சி அதன் சார்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மூலம் விசேட அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றி பொதுவிடமொன்றிலேனும், தனியார் வளவிலேனும் ஏதேனும் படைப்பயிற்சியை அல்லது வேறு இராணுவ அல்லது துணை இராணுவப் பயிற்சியை ஆள் எவரும் ஒழுங்குசெய்தலாகாது, நடாத்துதலாகாது அல்லது அதில் பங்குபற்றுதலாகாது.

3. இந்த ஒழுங்குவிதிகள்—

(அ) ஆயுதம் தாங்கியபடைச் சேவையிலுள்ள உறுப்பினர்களுக்கு ; அல்லது

(ஆ) பொலிசுப்படை உறுப்பினர்களுக்கு ; அல்லது

(இ) பாடசாலைத் தலைவரினால், அந்தப் பாடசாலையின் அல்லது வேறேதேனும் பாடசாலையின் மாணவர்களுக்காக, அந்தப் பாடசாலையின் வளவில், ஒழுங்கு செய்யப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட ஏதேனும் படைப்பயிற்சிக்கு அல்லது பயிற்சிக்கு, அத்தகைய படைப்பயிற்சி அல்லது பயிற்சி கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் ஒருவரால் பொதுவான அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்டிருப்பின்,

ஏற்புடையனவாகா.

4. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளில் எதனையும் மீறும் ஆளெவரும் தவறொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இரண்டு ஆண்டு காலத்துக்கு மேற்படாத கடுழிய மறியலுக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு, அல்லது அத்தகைய மறியல், குற்றப் பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

5. இந்த ஒழுங்குவிதிகளில்—

(அ) " படைப்பயிற்சி " என்பது—

(i) தொகுதிகளாக அல்லது அமைப்புகளாக அணிவகுத்துச் செல்லுதலையும் ;

(ii) இராணுவ அல்லது துணை இராணுவத் தொகுதிகளாக அல்லது அமைப்புக்களாக அவர்கள் தங்களை அமைத்துக்கொள்ளும்படி ஆட்களுக்குப் பயிற்சியளித்தலையும், அல்லது இராணுவ அல்லது துணை இராணுவத் தொகுதிகளாக அல்லது அமைப்புக்களாக அவர்கள் அமைவதற்கு அவர்களை இயலச்செய்யும் அல்லது அவர்களுக்கு வசதியளிக்கும் அத்தகைய பயிற்சியை ஆட்களுக்கு அளித்தலையும் ;

(iii) ஆயுதம் தாங்கிய அல்லது ஆயுதமில்லாத சண்டையில் ஆட்களுக்குப் பயிற்சி அளித்தலையும் ;

உள்ளடக்கும்.

(ஆ) " பாடசாலை " என்பது கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.